**தலைப்பு 2 – பிரதமர் அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 2 – பிரதமர் அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தெம்பர் 20 ஆம் திகதி பிரதமரின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

பிரதமர் அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 619.50 மில்லியனாக இருந்ததுடன், இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 545.81 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 73.69 மில்லியன் அதாவது 11.90 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **செலவினம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | | | **தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதிஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| மீண்டெழுபவை | 483.19 | 470.27 | 12.92 | 2.67 |
| மூலதனம் | 136.31 | 75.54 | 60.77 | 44.58 |
| மொத்தம் | 619.50 | 545.81 | 73.69 | 11.90 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

பிரதமர் அலுவலகத்திற்குரிய 00201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 9.90 | 6.18 | 5.90 | 7.32 | 36.00 | 28.56 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

பிரதமர் அலுவலகத்தில் 02 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.58 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0013/0090/000 | 0.01 |
| 6000/0000/00/0016/0085/000 | 0.57 |
| மொத்தம் | 0.58 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

பிரதமர் அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமை

11 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு 24 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கையின் 67 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்காக நடாத்தப்பட்ட கலாசார நிகழ்ச்சிகளுக்காக 2015 பெப்ரவரி 13 ஆந் திகதி அரசாங்க வங்கியொன்றிலிருந்து ரூபா 5 மில்லியனும் 2015 மார்ச் 12 ஆந் திகதி இன்னுமொரு அரச வங்கியிருந்து ரூபா 5 மில்லியனும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 10 மில்லியன் நன்கொடையாக பிரதமர் அலுவலகத்திற்குக் கிடைத்திருந்தது. அவ்வாறு கிடைக்கப்பெற்ற நன்கொடைகள் நிதிப்பிரமாணம் 170(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. சுதந்திரதின விழாவிற்காக நடாத்தப்பட்ட கலாசார நிகழ்ச்சிக்காக அவ்வாறு வழங்கப்பட்ட ரூபா 8 மில்லியன் தொகையை நிதிப்பிரமாணம் 170 (2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது அந்த சுதந்திர தின விழாவிற்காக செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 2 மில்லியனில் ரூபா 1.13 மில்லியன் தொகை நன்கொடை வழங்கப்பட்ட பணிகளுக்குப் புறம்பான வேறு செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிரதமர் அலுவலகத்தால் அலரிமாளிகையின் சுற்றாடலில் வீதிகளுக்கு கொங்கிரீட் இடுவதற்காக மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2.63 மில்லியனுக்கு கொழும்பு மாநகர சபைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. 2015 யூலை 23 ஆந் திகதி அந்த ஒப்பந்தப் பெறுமதியில் 20 சதவீதமான ரூபா 053 மில்லியன் வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2015 ஆகஸ்ட் 15 ஆந் திகதி கொங்கிரீட் இடுதல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2016 மார்ச் 17 ஆந் திகதி வரையிலும் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும், அந்த ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 31 | 27 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 05 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 164 | 86 | 78 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 178 | 91 | 87 | - |
| (v) | ஏனைய (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 05 | - | 05 |
| | மொத்தம் | 380 | 214 | 17 | 05 |